**கவனிக்க.**-2024.08.09 ஆந் திகதிய இல. 2397 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2398- 2024 අගෝස්තු මස 16 වැනි සිකුරාදා - 2024.08.16

*2398 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1816 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1819 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1810 | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1812 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஓகத்து மாதம் 23ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1809- B 082598 - 5,403 (2024/08)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## அறிவித்தல்

## மூதூர் மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்
## பகிரங்க ஏல விற்பனை - 2024.08.31

1. மூதூர், மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அரசுடமையாக்கப்பட்ட மற்றும் உரிமைகோரப்படாத பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை 2024.08.31 ஆந் திகதியன்று காலை 9.00 மணியளவில் நீதிமன்ற வளாகத்தில் நடாத்தப்படும்.

2. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை (1/2 ) மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.

3. பகிரங்க ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கப்பெறாதவிடத்து ஏலவிற்பனையிலிருந்து மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

4. விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. பொருட்களைக் கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டை கொண்டு வர வேண்டும்.

மொஹமட் தஸ்னீம் பௌஸான்,
மாவட்ட நீதிபதி/நீதிவான்.

மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்,
மூதூர்.

**பகிரங்க ஏல விற்பனை - 2024.08.31.**
**மூதூர் மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்**

| *S.N* | *Case No.* | *Description of Production* | *Qty* |
|---|---|---|---|
| 01 | MC/57228/24 | துளையிடப்பட்ட பெரிய இரும்பு வாளி | 01 |
| 02 | MC/57229/24 | துளையிடப்பட்ட பெரிய இரும்பு வாளி | 01 |
| 03 | MC/57361/24 | துளையிடப்பட்ட பெரிய இரும்பு வாளி | 01 |
| 04 | MC/57362/24 | துளையிடப்பட்ட பெரிய இரும்பு வாளி | 01 |
| 05 | MC/57365/24 | துளையிடப்பட்ட பெரிய இரும்பு வாளி | 01 |
| 06 | MC/57370/24 | துளையிடப்பட்ட பெரிய இரும்பு வாளி | 01 |
| 07 | MC/57371/24 | துளையிடப்பட்ட பெரிய இரும்பு வாளி | 01 |
| 08 | MC/57372/24 | துளையிடப்பட்ட பெரிய இரும்பு வாளி | 01 |
| 09 | MC/57373/24 | துளையிடப்பட்ட பெரிய இரும்பு வாளி | 01 |

| *S.N* | *Case No.* | *Description of Production* | *Qty* |
|---|---|---|---|
| 10 | MC/57374/24 | துளையிடப்பட்ட பெரிய இரும்பு வாளி | 01 |
| 11 | MC/57370/24 | சவள் | 01 |
| 12 | MC/57371/24 | சவள் | 01 |
| 13 | MC/57279/24 | சவள் | 01 |
| 14 | MC/57280/24 | சவள் | 01 |
| 15 | MC/57281/24 | சவள் | 01 |
| 16 | MC/57316/24 | பெரிய இரும்புப் பானை | 01 |
| 17 | MC/57472/24 | பெரிய அலுமினியப் பானை | 01 |
| 18 | MC/57316/24 | பெரிய இரும்புத் தாச்சி | 01 |
| 19 | MC/57316/24 | பெரிய அலுமினியத் தாச்சி | 01 |
| 20 | MC/57104/for/24 | கோடாரி | 01 |
| 21 | MC/57105/for/24 | கோடாரி | 01 |
| 22 | MC/56997/for/24 | விறகுகள் | $1m^3$ x $1m^3$ |
| 23 | MC/57008/for/24 | விறகுகள் | $1m^3$ |
| 24 | MC/57104/for/24 | விறகுகள் | $1m^3$ |
| 25 | MC/57105/for/24 | விறகுகள் | $1m^3$ |
| 26 | MC/57162/for/24 | விறகுகள் | $0.5\ m^3$ |
| 27 | MC/57161/for/24 | விறகுகள் | $1.5\ m^3$ |
| 28 | MC/57163/for/24 | விறகுகள் | $0.5\ m^3$ |
| 29 | MC/57164/for/24 | விறகுகள் | $0.5\ m^3$ |
| 30 | Unidentified Case No | பழுதடைந்த துவிச்சக்கர வண்டி | 07 |

| *S.N* | *Case No.* | *Description of Production* | *Qty* |
|---|---|---|---|
| 31 | Unidentified Case No | ஆற்று மணல் | 21 Cube |
| 32 | Unidentified Case No | இருமணி | 09 Cube |

*08- 96*

## ஆய விற்பனையும் குத்தகையும்

***ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2024***

*(2025, சனவரி 01 ஆந் திகதி முதல் 2025, திசெம்பர் 31 ஆந் திகதி வரை)*

*2025, சனவரி 01 ஆந் திகதி முதல் 2025, திசெம்பர் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களிலும் இருக்கும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.*

*2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படுதல் வேண்டும்.*

*3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடதுபக்க மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் "..................... இலக்க ......... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடல் வேண்டும். கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2024.09.27 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ஜா-எல பிரதேச செயலாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் ஜா-எல பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் பெட்டியினுள் இடல் வேண்டும்.*

*4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகள் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.*

*5. 2024.09.27 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அச்சமயம் கேள்விப்பத்திரக்காரர்கள் ஜா-எல பிரதேச செயலகத்துக்குச் சமுகமளித்தல் வேண்டும்.*

*6. குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்ய முடியாமற் போன தவறணைகள் 2024.10.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அப்போது ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திரங்களும் வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கு அமைவாக அமைந்திருத்தல் வேண்டும்.*

7. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை ஜா-எல பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பீ.ஏ.ஏ.எஸ்.வீரசேகர,
பிரதேச செயலாளர்,
ஜா-எல.

பிரதேச செயலகம்,
ஜா-எல,
2024.08. 01.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பிரிவு | கிராமம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ( ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | கந்தான | 2024.09.27 மு.ப. 10.30 மணிக்கு | 1,500.00 |
| 2. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | வெலிகம்பிட்டிய | 2024.09.27 மு.ப. 10.30 மணிக்கு | 1,500.00 |
| 3. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | கணுவன | 2024.09.27 மு.ப. 10.30 மணிக்கு | 4,000.00 |
| 4. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | மடமவத்த ஏகல | 2024.09.27 மு.ப. 10.30 மணிக்கு | 5,000.00 |
| 5. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | தடுகம | 2024.09.27 மு.ப. 10.30 மணிக்கு | 1,000.00 |

08-103

---

**வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவு**

**கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடல் - 2025**

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 1983 ஆம் ஆண்டிற்கும் அதன் பின்னரான காலப்பகுதிக்கும் செல்லுபடியான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கும், அக்காலப் பகுதியில் செயல்படுத்தப்படும் சகல மதுவரி நிபந்தனைகளுக்கும் உட்பட்டு 2025ஆம் ஆண்டில் கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் சில்லறைக்கு கள்ளு விற்பனை செய்யும் தனியுரிமை கொள்வனவிற்காக கொத்மலை பிரதேச செயலாளரினால் 2024.09.04 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) சகல கேள்விப்பத்திரங்களும் இத் தீவில் உள்ள எந்தவொரு பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்படும் குறிப்பிட்ட விண்ணப்பப்படிவத்தில் மாத்திரமே அனுப்பப்படல் வேண்டும்;

(ஆ) கேள்விப்பத்திரத்துடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைப் பணத்தினை ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்தி பெற்றுக்கொண்ட உத்தியோகபூர்வ பற்றுச் சீட்டு இணைக்கப்படல் வேண்டும் ;

(இ) கேள்விதாரரின் காணி நிலம் போன்ற அசைவற்ற ஆதனங்கள் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்கள் பற்றிய சான்றிதழை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துச் சான்றிதழ்களை சமர்ப்பித்தல் தொடர்பில் மேற்குறிப்பிட்ட கள்ளுத் தவறணைகளினது குத்தகை நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிமுறைகள் முறையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் என கேள்விதாரருக்கு அறிவிக்கப்படுகின்றது;

(ஈ) கேள்விப் பத்திரங்களை நிரப்பும் போது கீழ்வரும் விடயங்களை கேள்விதாரர் கருத்திற்கொள்ளல் வேண்டும்;

(i) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்பட்டு கேள்வித் தொகை எழுத்திலும் இலக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும் ;

(ii) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிடும் சாட்சியாளர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும் ;

(iii) பத்திரத்திரத்தில் திருத்தங்கள் செய்யப்படின் வெட்டப்படின் ஒவ் ஒவ்வொரு இடத்திலும் கேள்விதாரர் முழுமையான கையொப்பத்தையும் திகதியும் இடல் வேண்டும் ;

(iv) அனைத்து கேள்விதாரரும் தமது தேசிய அடையாள அட்டையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை கேள்விப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

மேற்பகுறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தை, பிணைப்பணம் செலுத்திய உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு, சொத்துச் சான்றிதழ் ஆகியவற்றுடன் கடித உறையினுள் இட்டு, முத்திரையிட்டு, அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தவறணையின் பெயர், இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி திகதிக்கு முன் கொத்மலை, பிரதேச செயலக கேள்விப்பத்திர பெட்டியில் இடல் வேண்டும்.கேள்விப்பத்திரத்தை தபாலில் அனுப்புவதாயின் இறுதித் திகதியின் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னராக பிரதேச செயலாளர், கொத்மலை பிரதேச செயலகம், கொத்மலை என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரம் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நேரத்துக்கு கேள்விதாரர் பிரதேச செயலகத்துக்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உரித்தாகும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர் கொள்வனவாளராக அறிவிக்கப்பட்டவுடன், அன்றைய தினம் பி.ப. 2.00 மணிக்கு முன்னர் பிணை வைப்புத் தொகையாக வலப்பனை பிரதேச செயலாளரினால் தீர்மானிக்கப்படக்கூடிய, 03 தவறணைகளுக்குக் குறையாத தொகையை பிணை வைப்புத்தொகையாக வலப்பனை பிரதேச செயலாளருக்கு வைப்பிலிடல் வேண்டும். மேற்படி வைப்பை நில்தண்டாஹின்ன மக்கள் வங்கியில் ஒரு வருட நிலையான வைப்புக் கணக்கில் வைத்திருப்பதற்கு கேள்விதாரர் இணக்கம் தெரிவித்தல் வேண்டும். இவ்வைப்பை பணம் மூலமாகவோ அல்லது வங்கி மூலமாகவோ செலுத்துவதென குறிப்பிடப்பட்ட காசோலை மூலமாகவோ அல்லது இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் வழங்கப்படும் பாதுகாப்பான காசுக்கட்டளை மூலமாகவோ செலுத்துதல் வேண்டும்.

7. தேவையான முத்திரை போன்றவற்றை சமர்ப்பித்து செலுத்தி குத்தகைக்காரர் நிபந்தனைகளிலும், ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடல் வேண்டும்.

8. இணக்கம் தெரிவிக்கப்படும் கேள்வித்தொகையை தவணைகளாக பணமாக செலுத்தக் கூடியவர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

9. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியும் வேறு வேறாக தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

10. ஏதாவதொரு தவறணையும் குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாதவிடத்து 2024.10.02 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு இவ்விடத்தில் மீண்டும் குத்தகைக்கு விடப்படும்.

11. இக்குத்தகை வழங்கல் தொடர்பிலான இறுதித் தீர்மானம் எனது தீர்மானமாக அமையும்.

12. குத்தகைக்கு விடல், உரிய நிபந்தனைகள் மற்றும் ஏனைய மேலதிக விபரங்களை கொத்மலை பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**உப அட்டவணை**

| இலக்கமும் தவறணையின் பெயரும் | தவறணை அமைந்துள்ள இடம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | கேள்விப்பத்திர பிணைப்பணம் ரூ.ச. |
|---|---|---|---|
| கள்ளுத் தவறணை இலக்கம் 5 பதியபெலெல்ல | பதியபெலெல்ல கிராம அலுவலர் பிரிவு | 2024.09.04 மு.ப. 10.30 | 5,000.00 |

13. மேலதிக தகவல்களுக்கு பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இல.:052- 2278000/052-2278157.

எஸ். எம்.சீ. சமரகோன் ,
பிரதேச செயலாளர்,
வலப்பனை.

வலப்பனை பிரதேச செயலகம்,
2024.08.01.

08-135

---

**மட்டக்களப்பு மாவட்டம்**
**கோரளைப்பற்று வடக்கு, வாகரைப் பிரதேச செயலகப் பிரிவில்**
**வாகரை கள்ளுத் தவறணைக்கான குத்தகை விற்பனை**
**2024 யூலை - 2025 யூன்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 1982ஆம் வருட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேசத்திற்குட்பட்ட வாகரைக் கள்ளுத்தவறணைக்கான கேள்வி 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2025, யூன் மாதம் 30ஆந் திகதி வரையுள்ள கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் கோரளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 1,500 ) பணத்தை கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2024.08.16ஆந் திகதி முதல் 2024.08.20ஆந் திகதி முற்பகல் 11.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளர்களினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15%ற்குக் குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதி சான்றிதழ் , கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. பிழையாக பூரணப்படுத்தப்படும் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை மீளப் பெற விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தினத்திலிருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப் பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் மீளச் சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்கு கின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். ( நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)

7. ஏனைய விபரங்கள் கோரளைப் பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை**

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| பால் சேனை கிராம அலுவலர் பிரிவு | TT No. 05 | 2024.08.21 | மு.ப. 10.30 மணி |

**குறிப்பு**.- 1. கேள்விச் சபை 2024.08.21 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்குக் கூடும்.
2. விற்பனைத் தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாதுவிட்டால் மறு கேள்விச்சபை 2024.08.28 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.
3. தெரிவு செய்யப்படும் குத்தகைக்காரர் மீள் குத்தகை விற்பனை இடம்பெற்ற அதே தினத்தில் அலுவலக நேரத்தினுள் பாதுகாப்பு வைப்புத் தொகையை பிரதேச செயலகத்தில் செலுத்த வேண்டும்.

அமலினி, கே.,
பிரதேச செயலாளர்,
கோரளைப்பற்று வடக்கு,
வாகரை.

பிரதேச செயலகம்,
கோரளைப்பற்று வடக்கு,
வாகரை,
2024.08.07.

08- 137

---

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### EZY டிஸ்ரிபியுசன் ( பிரைவேட்) லிமிட்டட்
### கம்பனியின் பதிவு இல. PV 7277

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்:* EZY டிஸ்ரிபியுசன் (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.17, சமகி மாவத்தை, பொருபன வீதி, இரத்மலானை
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* 73/ /2021/CO
*கம்பனி கலைப்பாளர் பெயர்:* Gerard Jeevananthan David
*முகவரி:* Liquidator, C/o, Deloitte Associates,
(Before SJMS Associates)
No.11, Castle Lane, Colombo 4.
*நியமனத் திகதி:* 2021.12.13

08- 97/1

**EZY டிஸ்ரிபியுசன் ( பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல. PV 7277**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழான கம்பனி கலைப்பு உத்தரவு பற்றிய அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்:* EZY டிஸ்ரிபியுசன் (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.17, சமகி மாவத்தை, பொருபன வீதி, இரத்மலானை
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* 73/ /2021/CO
*நீதிமன்ற கட்டளைத் திகதி:* 2021.12.13
*கோரிக்கை தாக்கல் செய்த திகதி:* 2021.09.16
*கம்பனி கலைப்பாளர் பெயர்:* Gerard Jeevananthan David
*முகவரி:* Liquidator, C/o Deloitte Associates,
(Before SJMS Associates)
No.11, Castle Lane, Colombo 4.

08- 97/2

---

**சூரி ரேடிங் கம்பனி ( பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல. PV 4288**

**கம்பனி கலைப்பு மற்றும் கலைப்பாளர் விடுவிப்பு அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்:* சூரி ரேடிங் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.06, பங்களாவத்தை வீதி, மாபோல, வத்தளை
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* HC (CIVIL)02/2013/CO
*கம்பனி கலைப்பாளர் பெயர்:* G. J. David
*முகவரி:* C/o SJMS Associates,
(Presently at Deloitte Associates)
Level 4.No.2, ( Presently at Level 3, No.11) Castle Lane, Colombo 4.
*கம்பனி கலைப்பு மற்றும் கலைப்பாளர் விடுவிப்புத் திகதி:* 2024.07.19

08- 98

---

**மக நகும றோட் கன்ஷரக்ஷன் இக்கியூப்மெண்ட் கம்பனி ( பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல. PV 16847**

**தற்காலிக கலைப்பாளர் விடுவிப்பு அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்:* மக நகும றோட் கன்ஷரக்ஷன் இக்கியூப்மெண்ட் கம்பனி (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.81/ 4, நியூ நுகே வீதி, பேலியகொட
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* HC ( Civil)32/2023/CO
*கம்பனி தற்காலிக கலைப்பாளர் பெயர்:* G. J. David
*முகவரி:* Provisional Liquidator, C/o Deloitte Associates,
Level 3, No.11, Castle Lane, Colombo 4.
*தற்காலிக கலைப்பாளர் விடுவிப்புத் திகதி:* 2024.07.26

08- 120

**கொரப்விஸ் ( பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல. PV 111855**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்:* கொரப்விஸ் (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.199, கியூ வீதி, கொழும்பு 02
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* HC/ Civil/16/2024/CO
*கம்பனி கலைப்பாளர் பெயர்:* G. J. David
*முகவரி:* Liquidator, C/o Deloitte Associates,
No.11, Castle Lane, Colombo 4.
*நியமனத் திகதி:* 2024.07.12

08- 121/1

---

**கொரப்விஸ் ( பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல. PV 111855**

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழான கம்பனி கலைப்பு உத்தரவு பற்றிய அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்:* கொரப்விஸ் (பிரைவேட்) லிமிட்டட்
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.199, கியூ வீதி, கொழும்பு 02
*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இல.:* HC/ Civil/16/2024/CO
*நீதிமன்ற கட்டளைத் திகதி:* 2024.03.28
*கோரிக்கை தாக்கல் செய்த திகதி:* 2024.02.22
*கம்பனி கலைப்பாளர் பெயர்:* G. J. David
*முகவரி:* Liquidator, C/o Deloitte Associates,
No.11, Castle Lane, Colombo 4.

08-121/2

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் கீழ் பகிரங்க அறிவித்தல்**

ரெஸல் ஹோல்டிங்ஸ் ( பிறைவட்) லிமிடட் ( கம்பனிப் பதிவிலக்கம் பிவி 112653) மற்றும் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 28, வைத்தியர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தையில் ( முன்னர் டிக்மன்ஸ் வீதி என அறியப்படுத்தப்பட்டிருந்தது) கொழும்பு 04 இல் அமைந்துள்ளது என்பதோடு அதன் கூறப்பட்ட மூலதனத்தை முப்பதியொரு கோடியே எண்பத்து மூன்று இலட்சத்து முப்பத்தாறாயிரத்து நாநூற்று ஐம்பத்தாறு இலங்கை ரூபாய் ( ரூபா 31,83,36, 456.00) தொகைக்கு குறைப்பதன் மூலம் தொடர்வதற்கு முன்மொழிகிறது என 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் அடிப்படையில் பகிரங்க அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகிறது.

ரெஸல் ஹோல்டிங்ஸ் ( பிறைவட்) லிமிடட்,
பணிப்பாளர் சபை.

08- 106

**பகிரங்க அறிவித்தல்**

**பொது நிறுவனமாக மாற்றும் போது ஏற்படும் பெயர் மாற்றம்**

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 11(5) ஆம் பிரிவின்படி, மஹாராஜா புட்ஸ் லிமிடட் ( கம்பனி இல. பிபி 00296080 ) ஆனது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாக அறிவிப்பு இங்கோ கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் இல. 18/3, கலாநிதி ஈ.ஏ. குரே மாவத்தை, கொழும்பு 06 இல் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகம் 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி முதல் பொது வரையறுக்கப்பட்ட நிறுவனமாக மாற்றப்படும் மற்றும் சட்டத்தின் 11(3) ஆம் பிரிவின்படி நிறுவனமானது அதன் பெயரை மாஹாராஜா புட்ஸ் பிஎல்சி ஆக மாற்றியதாகக் கருதப்படும்.*

*வாரியத்தின் கட்டளைப்படி,*

*சார்ட் பிசினஸ் சிஸ்டம்ஸ் ( பிரைவேட்) லிமிடெட்,*
*செயலாளர்கள்.*

*இல. 09, 03 ஆவது மாடி,*
*பாடசாலை வீதி,*
*கொழும்பு 03.*

*08- 107*

---

**ஒன்றிணைத்தல் பற்றிய அறிவித்தல்**

***2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 (3) (b) பிரிவுக்கு அமைவாக சன்ஷயின் பெகேஜிங் லங்கா லிமிடட் என்ற நிறுவனம் சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி என்ற நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்***

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 242(1) ஆம் பிரிவுக்கு ஏற்ப ஒன்றிணைப்பிற்கான தீர்மானம் ஒன்றை சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி மற்றும் சன்ஷயின் பெகேஜிங் லங்கா லிமிடட் ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகள் மேற்கொண்டுள்ளன என்பதோடு, அதன் மூலம் சன்ஷயின் பெகேஜிங் லங்கா லிமிடட் மற்றும் சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி ஆகிய நிறுவனங்கள் ஒரு தனி நிறுவனமாக ஒன்றிணைக்கப்படுவதோடு, ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனம் சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி ஆகும்.*

*மேற் சொல்லப்பட்ட ஒன்றிணைப்பானது 2024, ஒற்றோபர் 01 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படுத்துவதற்கு முன் மொழியப்பட்டுள்ளது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி,*
*சன்ஷயின் பெகேஜிங் லங்கா லிமிடட்.*

*08- 130*

---

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

*சிலாபம் பிரதேச செயலகப் பிரிவு*

*2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியினுள் இத்துடன் இணைத்துள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபானத் தவறணைக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக, கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்விகளைச் சமர்ப்பிக்கப் படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புத் தொகைப் பணத்தை பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15 % பெறுமதியான பெறுமதிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை முறையாக மூடப்பட்ட உறையில் இடது பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "............................ இலக்கம் கொண்ட ........................ அந்நிய மதுபானத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு 2024.09.18 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதனை இடுதல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் மேற்குறிப்பிட்ட நேரம் திகதிக்கு முன் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. 2025 ஆம் ஆண்டுக்கான கேள்விப் பத்திரங்கள் சம்பந்தமாக 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபானத் தவறணை குத்தகை நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2024.09.18 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் சகல கேள்விப்பத்திரதாரர்களும் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. இவ்வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கமைவாக இதுவரை விற்கப்படாமல் ஏதாவது தவறணை இருப்பின் அவை 2024.10.16 ஆந் திகதி மு.ப. 10.30. மணிக்கு மீள் விற்பனை செய்யப்படும்.

7. இது தொடர்பான மேலதிக விபரங்களை சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல.032- 2223205 , 032-2222138.

**அட்டவணை**

| பகுதி | கிராமம் | கேள்விப் பத்திரம் ஏற்கும் நேரமும் திகதியும் | மீள் விற்பனை செய்யும் நேரமும் திகதியும் | தவறணை திறக்கும் நேரம் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|
| சிலாபம் | இல. 07, பிடிபன தெரு, சிலாபம் | 2024.09.18 மு.ப. 10.30 | 2024.10. 16 மு.ப. 10.30 | மு.ப.11.00 மணி முதல் பி.ப. 2.00 வரை பி.ப.5.00 மணி முதல் பி.ப. 8.00 வரை | 1,500.00 |
| சிலாபம் | இல. 06, பிடிபன தெரு, சிலாபம் | 2024.09.18 மு.ப. 10.30 | 2024.10. 16 மு.ப. 10.30 | மு.ப.11.00 மணி முதல் பி.ப. 2.00 வரை பி.ப.5.00 மணி முதல் பி.ப. 8.00 வரை | 1,500.00 |

ஏ.எம்.சி. பிரேமசூரிய,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2024.08.07.

08-117